தலைப்பு 194 - இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சு

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 194 - இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 யூன் 23 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூன் 20 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து இளைஞர் அலுவலகள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களிலிருந்து நிதி நிலைமை, நிதி செயலாற்றல், காசுப்பாய்ச்சல் என்பன நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு I இல் குறிப்பிட்ட நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவைகள் சம்பந்ததமாக நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 ஒரு வியடத்தினை வலியுறுத்துதல் - நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கின்ற நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு தொடர்பாக கவனம் செலுத்துகிறேன். நிதிக்கூற்றுக்களானது அரசாங்க நிதிப்பிமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்திய 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய 06/2024 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின், பொதுத் திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டிற்காக தயாரிக்கப்பட்டது. அதன் காரணமாக இந்நிதிக் கூற்றுக்கள் ஏனைய நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கலாம். எனது அறிக்கையானது இளைஞர் அலுவலகள்

மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின், பொது திறைசேரியின் மற்றும் இலங்கை பாராளுமன்றத்தின் பயன்பாட்டிற்காக மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இவ்விடயம் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் மாற்றம் செய்யப்படமாட்டாது.

1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

அரசாங்க நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரிவரி 21 ஆந் திகதி திருத்திய 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய 06/2024 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவைகள் சம்பந்தமாக நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு

அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேண்டுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

1.6. நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) வருமானமற்ற பெறுவனவுகள்

நிதிக்கூற்றுக்களுக்குரிய வருமானமற்ற பெறுவனவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
விளையாட்டுத் துறை அமைச்சு, வியைாட்டுடுத்துறை அபிவிருத்தி திணைக்களம் மற்றும் டயலொக் நிறுவனத்துடன் இணைந்து மீளாய்வாண்டில் ஒழுங்குபடுத்தி நடாத்தப்பட்ட Sri Lanka Sports Fiesta 2024 நிகழச்சித்திட்டத்திற்காக ரூபா 40 மில்லியன் பணம் விளையாட்டுத் துறை அமைச்சிற்கு தேசிய விளையாட்டுத் துறை நிதியத்திலிருந்து மற்றும் இலங்கை கிரிகட் நிறுவனத்திடமிருந்தும் வழங்கப்பட்டிருந்த போதிலும்	நிகழ்ச்சித்திட்டத்திற்கான அனைத்து நடவடிக்கைகளும் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் விளையாட்டு நிதியத்தின் மூலம் ரூபா 40 மில்லியன் வழங்கியமை மாத்திரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிகழச்சித் திட்டத்தின் மூலம் உழைக்கப்பட்ட வருமானம் சம்பந்தமாக இந்த அமைச்சிற்கு அறிவிக்கப்படவில்லை.	அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டியிருந்த வருமானங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அந்த வருமானங்கள் உள்ளடங்கலாக

அப்பணம் வருமானமற்ற பெறுவனவுகளாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்நிகழ்ச்சித்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்ட 03 நாட்களுக்குள் நடாத்தப்பட்ட விற்பனைக் கடைகளிலிருந்து பெற்ற வருமானங்களும் அனுசரணை பெறுவனவுகளும் கணக்குகளுக்கு கொண்டு வரப்படாது கைவிடப்பட்டிருந்தது.		கிடைத்த வருமானங்களையும் கணக்குகளுக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ) மீண்டுவரும் செலவுகள்

நிதிக்கூற்றுக்களுக்குரிய மீண்டுவரும் செலவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	**பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்**	**சிபாரிசுகள்**
அமைச்சு செலவு விடயத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டினை பயன்படுத்தி ஏனைய நிறுவனங்களின் மூலம் செலவுசெய்யப்பட்ட ரூபா 2,427.69 மில்லியன் மீண்டுவரும் செலவுகள் நி.பி 208 இன் கீழ் நிதிக்கூற்றுக்களில் தனியாக காட்டப்பட வேண்டிய போதிலும் அச்செலவுகளை அமைச்சு செலவுசெய்த ஒரு செலவாக கருதி ஏ.சீ.ஏ 2(ii) படிவத்தில் காட்டப்பட்டிருந்தது.	இணங்கிக் கொள்ளப்படுகின்றது. பதிவுசெய்யும் தவறினால் தேறிய நிதி ஏற்பாட்டிற்குரிய பெறுமதி நிதி ஏற்பாட்டின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன் அந்த வித்தியாசம் நி.பி 66/69 மாற்றங்களுக்கு உள்ளடக்கப்படுதல் வேண்டும்.	சரியாக நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் வேண்டும்.

(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்க கூற்றுக்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	**பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்**	**சிபாரிசுகள்**
இடமாற்றம் பெற்று சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 19,580 கடன் மீதியையும் ஓய்வு பெற்றுச் சென்ற ஒரு உத்தியோகத்தரிடமிருந்து 01 ஆண்டிற்கு குறைந்த காலத்தில் காணப்பட்ட அறவிட வேண்டிய கடன்	ரூபா 19,580 கடன் மீதியை கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்திக்கு ஒப்படைப்பதற்கும் ஏனைய கடன் மீதிகளை எதிர்வரும் காலங்களில் தீர்த்துவைப்பதற்கும்	கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

மீதி ரூபா 137,740 இனையும் அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையும் அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஈ) வைப்புக்கள்

நிதிக்கூற்றுக்களுக்குரிய வைப்புக் கொடுப்பனவுகள் மற்றும் மீதியை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
2024 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைப் பரீட்சித்த போது ஏ.சீ.ஏ.04 படிவத்தின் கீழ் ஒவ்வொரு பொது வைப்புக்குரிய 2024 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறான ஆரம்ப மீதியை பதிவுசெய்யும் போது பிழையான மீதிகள் உள்ளடக்கப்பட்டதன் காரணமாக அப்பெறுமதிக்கும் திறைசேரி படிவம் SA-30 இல் குறிப்பிட்ட ஆரம்ப மீதிக்குமிடையே ரூபா 41,516,933 வித்தியாசம் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.	இணங்கிக் கொள்ளப்படுகின்றது. எதிர்வரும் காலங்களில் இவ்வாறான தவறுகளை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியான மீதிகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(உ) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை கொள்லவனவு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(i)	இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் ரூபா 358,000,000 பெறுமதியான ஒரு கட்டிடத்துடனான காணி, விளையாட்டுக் கல்வி நிறுவனம் மற்றும் விளையாட்டு மருத்துவ நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள காணி, விளையாட்டுத்துறை அமைச்சிற்கு இணைத்துக்	காணிகளை ஒப்படைத்தல் மற்றும் உரிய மதிப்பீடு செய்தல் முடிவடைந்ததன் பின்னர் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உரிய காணிகளின் பெறுமதியை மதிப்பீடு செய்து துரிதமாக கணக்ககளுக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	கொள்ளப்பட்டு காணப்படுகின்ற எம்பிலிப்பிட்டிய தலைமைத்துவ அபிவிருத்தி தேசிய நிலையத்தைச் சேர்ந்த 03 காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி மற்றும் தேசிய விளையாட்டுத் துறை சபைக்குச் சொந்தமான காணி, கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்கள் மற்றும் தியகம மஹிந்த ராஜபக்ச சர்வதேச விளையாட்டு தொகுதி முதலியவற்றை மதிப்பீடு செய்து சரியான பெறுமதிகளை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.		
(ii)	தலைமைத்துவ அபிவிருத்தி நிலைய காணியில் காணப்படுகினற மரப் பெறுமதியுடனான மரங்கள் மற்றும் செவ்விளநீர் , தென்னை மரம் முதலிய விவசாயப் பெறுமதியை கொண்ட மரங்களின் பெறுமதியை அடையாளங்கண்டு அப்பறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	அரசாங்க கணக்குகள் திணைக்களத்துடன் கலந்துரையாடி கணக்கீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளப்படும் என தயவாக தெரிவிக்கிறேன்.	உயிரியல் பெறுமதியுடனான சொத்துக்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு துரிதமாக கணக்குகளுக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iii)	கணக்காய்வு தெரிவுப் பரீட்சிப்பிற்கு இணங்க மீளாய்வாண்டின் போது அமைச்சினால் சிறிய தொழில் முயற்சி பிரிவின் பிராந்திய அலுவலகங்களுக்கு விடுவிக்கப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தி ரூபா 10,787,734 நடைமுறையற்ற சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் அப் பெறுமதியை அடையாளங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் காலங்களில் மூலதமாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.	கொள்வனவு செய்த மூலதனச் சொத்துக்களை துரிதமாக கணக்குகளுக்கு எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iv)	நடைமுறை வேலை மீதிகளில் நீண்ட காலமாக காணப்படுகின்ற ரூபா 1,067,615,012 பெறுமதியான 27 செயற்திட்டங்களில் தற்பொழுது	தற்பொழுது காணப்படுகின்ற மீதியில் பூர்த்தி செய்த செயற்திட்டங்களை அடையாளங்கண்டு	பூர்த்திசெய்த செயற்திட்டங்களை அடையாளங்கண்டு கணக்கீடு செய்வதற்கும் ஏனைய

பூர்த்திசெய்துள்ள செயற்திட்டங்களை அடையாளங்கண்டு கணக்கீடு செய்வதற்கும் மேற்கூறிய செயற்திட்டங்களிலிருந்து ஏனைய அரசாங்க நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு ஒப்படைக்கப்பட்ட செயற்திட்டம் சம்பந்தமாக தேவையான செம்மையாக்கல்களை மேற்கொள்வதற்கும் இன்றுவரை அமைச்சு தவறியிருந்தது.	கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	அரசாங்க நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு ஒப்படைக்கப்பட்ட செயற்திட்டங்கள் சம்பந்தமான செம்மையாக்கல் அமைச்சினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஊ) முற்பணக் கணக்கு மீதிகள்

முற்பணக் கணக்குகளில் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான மீதியை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	**பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்**	**சிபாரிசுகள்**
தியகம மஹிந்த ராஜபக்ச விளையாட்டரங்கில் மின்பிறப்பாக்கி இயந்திர அறை செயற்திட்டம், சமயலறை மற்றும் உணவுச்சாலை கட்டிடங்களை திருத்தம் செய்யும் செயற்திட்டம் மற்றும் கட்டுகஸ்தோட்டை புனித அந்தோனியார் வித்தியாலய விளையாட்டு மைதானத்தை தயார்படுத்துவதற்காக 2019 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட மொத்தமாக ரூபா 26.79 மில்லியன் முற்பண மீதி 2024 ஆம் ஆண்டின் இறுதி வரை அறவீடு செய்வதற்கு அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	அமைச்சு செயலாளரினால் 2025-06-06 ஆந் திகதி ஒரு குழு நியமிக்கப்பட்டுளது. அக்குழு அறிக்கையின் பிரகாரம் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவையாக இருந்த முற்பண மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றறேன்.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பித்த நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் இணங்கியிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 செலவு முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 50 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளைப் பின்பற்றி முறையாக முன் அறிந்து நடைமுறைச சாத்தியமின்றி மதிப்பீட்டினைத் தயாரித்ததன் காரணமாக 13 செலவு விடயங்களுக்காக வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 257,470,000 நிதி ஏற்பாடு எந்த பயன்பாடும் மேற்கொள்ளப்படாது முழுமையாக சேமிக்கப்பட்டிருந்ததுடன் இன்னும் 05 செலவு விடயங்களுக்குரிய நிதி ஏற்பாட்டில் 50% அல்லது அதற்கு மேற்பட்ட சதவீதம் ஏனைய செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்ததன் ாரணமாக அச்செலவு விடயங்களின் நிதி எற்பாட்டு பணம் 100% ஆல் அல்லது அதற்கு மேற்பட்ட சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டிருந்தது.	கொடுப்பனவுக்கான சந்தர்ப்பம் ஏற்படாமை, அத்தியவசியமான செலவுகள் மாத்திரம் மேற்கொள்ளப்படல், விளையாட்டு மருத்துவ நிறுவனத்திற்கான வீதவரி இலக்கத்தினை பெற்றுக்கொண்டிருக்காமை மற்றும் சேவைகளைப் பெற்றுகொண்டிருக்காமை யே இச்சேமிப்பிற்கு காரணமாகும்.	முறையான முன்னறிதல் மற்றும் நடைமுறைச் சாத்தியத்தின் அடிப்படையில் மதிப்பீட்டினைத் தயாரித்து செலவு செய்தல் வேண்டும்.

3.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ) விளையாட்டுத்துறை அமைச்சினால் மீளாய்வாண்டின் போது பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக 02 தனியார் வங்கிகளிடமிருந்து ரூபா 5,642,275 பெறுமதியான 04 வங்கிப் பிணைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவற்றில் மூன்று பிணைகளின் பிணை இருக்கும் காலம் 2025 ஏப்ரல் 03 ஆந் திகதி	உரிய பிணையை விடுவிக்குமாறு எங்கள் அமைச்சிற்கு வேண்டுதல் சமர்ப்பிக்கப்பட்டதன் பன்னர் உரிய பிணை முறியை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய செயலாற்றல் பிணை முறியை வழங்கிய வங்கிக்கு தெரிவிக்கப்படும்.	நிர்ணிக்கப்பட்ட திகதியில் பிணைகளிலிருந்து விடுபடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	முடிவடைந்திருந்தது. எனினும் 2024 திசமெப்ர் 31 ஆந் திகதியில உள்ளவாறு பிணை இருக்கும் காலத்தை பூர்த்திசெய்த ரூபா 1,522,625 பெறுமதியான பிணைகளிலிருந்து விடுவிப்பதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		
(ஆ)	இரண்டு வெளி நிறுவனங்களுக்கு தீர்த்துவைக்க வேண்டியிருந்த ரூபா 25,796,593 பொறுப்புக்களைத் தீர்ததுவைப்பதற்காக 03 ஆண்டுகள் காலமாக நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அவற்றில் ரூபா 24,858,873 பொறுப்புக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	மனித செயற்பாடுகள் இடம்பெறுகின்ற ஆய்வுகூடத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஆளணியினரை நியமித்து ஒரு ஆண்டு காலம் திருப்தியான முறையில் ஆய்வுகூடத்தினை செயற்படுத்த வேண்டிய போதிலும் அது நிறைவேற்றப்பட்டிருக்காத தனால் இந்த நிதி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.	உரிய பொறுப்புக்களைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் கணக்கீடு செய்யப்படாத பொறுப்புக்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கிய நிதி ஏற்பாட்டினைப பயன்படுத்துதல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் கீழ் காணப்படுகின்ற தேசிய இளைஞர் சேவைகள் சபைக்கு விடுவிப்பதற்கு சனாதிபதி செயலகத்திடமிருந்து அமைச்சிற்கு கிடைத்த ரூபா 493.52 மில்லியன் நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 74.20 மில்லியன் மாத்திரம் சபைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மிகுதிப் பணமாகிய ரூபா 419.32 மில்லியன் சபையினால் மேற்கொள்ளப்பட்ட செலவுகளுக்காக மீளளிப்புச செய்யப்படாது மீண்டும் சனாதிபதி செயலகத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டது.	சனாதிபதி செயலகத்தினால் வழங்கிய நிதி ஏற்பாட்டிற்காக தேசிய இளைஞர் சேவைகள் சபை நிர்ணயித்த நடைமுறைகளை பின்பற்றாததன் காரணமாக அக்கொடுப்பனவுகளை மீளளிப்புச் செய்வதற்கு முடியாதுள்ளது.	முறையான மேற்பார்வையுடன் நிதி ஏற்பாட்டை உரிய நிறுவனத்திற்கு விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்க் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச்

அவதானிப்புக்கள்			பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு	**பெறுமதி** **ரூபா**	**இணக்கமின்மை**		
(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாண க் கோவை நிதிப் பிரமாணம் 104	193,044	எம்பிலிபிடிய மாவட்ட வைத்தியசாலையினால் 2020 ஆம் ஆண்டின் போது தலைமைத்துவ அபிவிருத்தி நிலையத்தினை தனிமைப்படுத்துதல் நிலையமாக பயன்படுத்திய காலத்தில் காணாமல் போன ரூபா 193,044 தொகையான 05 வகைப் பொருட்களைச் சேர்ந்த 240 பொருள் விடயங்களும் பெறுமதியை தேடிக்கண்டு பிடிக்க முடியாத 17 வகை பொருட்களைச். சேர்ந்த 199 பொருள் விடயங்களும் சம்பந்தமாக	நி.பி 104(4) இன் பிரகாரம் முழுமையான அறிக்கை சமர்ப்பிப்பது தொடர்பாக ஒரு விசாரணை சபை நியமிக்கப்பட்டு தற்பொழுது விசாரணைகள் இடம்பெற்று வருகின்றது	இடம்பெற்ற நட்டத்தை பொறுப்புக்கூற வேண்டிய தரபபினரகளிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

			கணக்காய்வுத் திகதி வரை நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பொறுப்புக்கூற வேண்டியவர்கள நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை.		
(ஆ)	05/2020 ஆம் இலகக 2020 ஒக்தோபர் 02 ஆந் திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை 02(ஆ) ஆம் பந்தி	-	திருத்தம் செய்தல் மற்றும் பராமரித்தல் வினைத்திறன் இல்லாத நிலையில் காணப்படுகின்ற 03 வாகனங்களை கைதவிர்ப்புச் செய்வதற்கு அமைச்சு 02 ஆண்டுகளாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	திருத்தம் செய்தல் மற்றும் பராமரித்தல் வினைத்திறனற்றது என்ற நிலையில் காணப்படுகின்ற அனைத்து வாகனங்களையும் கைதவிர்ப்புச் செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	விதைத்திறன் அற்ற நிலையில் காணப்படுகின்ற வாகனங்களை கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	இளைஞர் அலுவலகள் மற்றும் வியைாட்டுத்துறை அமைைச்சின் பிரதான செயற்பாடுகளுக்கு மத்தியில் பொது மக்களின் உடல் நலத்தினை பேணுவதற்கு தேவையான வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு	உ்நாட்டு வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்களுக்காக பொருத்தமான வகையில் இளைஞர் மனிதவள வங்கியை ஆரம்பித்தல் என்ற செயற்பாடு 2023 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்திலிருந்து மனித	அமைச்சின் பிரதான செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	தொழில் வாய்ப்புக்களுக்காக பொருத்தமான வகையில் இளைஞர் மனிதவள வங்கியை ஆரம்பித்தல் ஆகிய செய்றபாடுகளை நிறைவேற்றுவதற்கு அமைச்சு இன்றுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	வலு மற்றும் தொழில் பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ளது.	
(ஆ)	2024 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டின் பிரகாரம் அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட பிரதான செயலாற்றல் குறிகாட்டிகளை அடைந்து கொள்ளும் செயலாற்றல் வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் இது தொடர்பான தகவல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.	இச்செயலாற்றலுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள விசேட குறிகாட்டிகளை திருத்தம் செய்து பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும் என தயவாக தெரிவிக்கிறேன்.	மதிப்பீட்டின் பிரகாரம் செயலாற்றல் குறிக்காட்டி சமர்ப்பிககப்படுதல் வேண்டும்.
(இ)	அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட இரத்தினபுரி மாவட்டத்திற்கு உரிய சிறிய தொழில் முயற்சிப் பிரிவின் 2024 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் இரத்தினபுரி மாவட்ட சிறிய தொழில் முயற்சி பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட 2024 செயல் நடவடிக்கைத் திட்டம் தொடர்புபட்டிருக்காததுடன் 73 பிரதான செயற்பாடுகளின் வருடாந்த இலக்குகளை அடைந்துகொள்ளும் செயல்முன்னேற்றம் 70% மட்டத்தில் காணப்பட்டது. பிரதான செயற்பாடுகளாக காட்டப்பட்டுள்ள 24 நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்ப்படுத்தப்படாததுடன் ஆண்டின் போது மேற்கொளளப்பட்ட தொழில் முயற்சி மேம்பாடு மற்றும் இணையவழிப்படுத்திய 02 தொழில் முயற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மொனராகலை	2024 ஆம் ஆண்டில் இரத்தினபுரி மாவட்ட சிறிய தொழில் முயற்சி பிரிவிற்குரிய அங்கீகரித்த செயல்நடவடிக்கைத் திட்டத்தினை அமுல்ப்படுத்தும் போது சனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் காலத்தில் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத:துவது மாவட்ட செயலகங்களின் மூலம் கைவிடப்பட்டதுடன் மேலதிக காலத்தில் நிகழ்சிசித்திட்டங்களை நடாத்தி உரிய வருடாந்த இலக்குகள் அடைந்துகொள்ளப்பட்டுள்ளது.	செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	மாவட்டத்தில் சிறிய தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினால் 2024 ஆம் ஆண்டின் போது அங்கீகரித்த நிகழ்சசித்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்காக ரூபா 4,500,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 3,314,564 மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்ததனால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டு பணத்தில் ரூபா 1,185,436 குறைந்த பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தது.		
(ஈ)	கம்பஹா மாவட்டத்தில் இளைஞர்களை வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி உதவிகளை வழங்குவதற்காக ரூபா 9,800,000 நிதி ஏற்பாடு மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் ஆரம்பத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் அச்செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை ல. மேலும் கம்பஹா மாவட்டத்தில் அமுல்ப்படுத்துவதற்காக 1,747 அஙகீகரித்த நிகழச்சித்திட்டங்களில் 883 நிகழ்சிசத்திட்டங்கள் மாத்திரம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்ததுடன் அது எதிர்பார்த்த நிகழ்ச்சித்திட்டங்களில் 50.54% ஆகும்.	நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் பணம் வழங்கப்படவில்லை.	நிதி ஏற்பாடுகளை முறையாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.2 எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைந்துகொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்		பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	அமைச்சினால் குருனாகல் மலியதேவ வித்தியாலயத்தில் ஈட்டி எறிதல்	இது சம்பந்மான விடயங்களை பரீட்சித்து ஒரு அறிக்கையினை	சாத்தியவள ஆய்வினை மேற்கொண்டு

மைதானத்தினையும் துப்பாக்கி சுடும் மைதானத்தினையும் நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் 2018 மார்ச் 28 ஆந் திகதி ரூபா 12,230,761 பெறுமதிக்கு 06 மாதங்களில் பூர்த்திசெய்வதற்கு ஒரு தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்திற்காக சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

மேலும் பல சந்தர்ப்பங்களில் ஒப்பந்த கால எல்லையினை 20 மாதங்களால் நீடித்தல் மேலதிக வேலைகளுக்காக விளையாட்டுத் துறை அமைச்சின் முறையான அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளாது நடவடிக்கை எடுத்தல், தீர்த்துவைத்தல் நடைமுறைகது துரிதமாக அனுப்பிவைக்காமை மற்றும் விலை முரண்கள் தொடர்பாக பரீட்சிப்பதற்காக நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினால் அந்த தீர்மானத்தினை வழங்குவதற்கு ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் எடுத்திருத்தல் முதலிய விடயங்களின் காரணமாக இணங்கிக் கொண்ட பெறுமதியினை விட ரூபா 4,225,610 வரியுடனான பெறுமதி மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. ஈட்டி எறிதல் மற்றும் துவக்கால் சுடுதல் விளையாட்டிற்காக விளையாட்டு மைதானத்தினை பயன்படுத்தக்கூடிய நிலைமைக்கு இன்று வரை மாற்றுவதற்கு முடியாமை ஆகிய விடயங்களின் அடிப்படையில் அமைச்சின் எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அதன் ஆளணியினருக்கு முடியாதிருந்தது.

சமர்ப்பிப்பதற்காக அமைச்சு செயலாளரினால் 2025-06-06 ஆந் திகதி ஒரு குழு நியமிக்கப்பட்டது. அக்குழுவின் அறிக்கையின் பிரகாரம் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

வினைத்தினாகவும் எதிர்பார்தத குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையிலும் செயற்திட்டங்கள் திட்டமிடப்படுதல வேண்டும். மேலும் நிர்மாண செயற்திட்டத்தை முறைப்படியாக முகாமைத்துவம் செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் செய்யப்படுதல் வேண்டும்.

(ஆ)	அமைச்சினால் தியகம மஹிந்த ராஜபக்ஸ சர்வதேச விளையாட்டுத் தொகுதி விளையாட்டு அகெடமி மற்றும் சர்வதேச விளையாட்டரங்கினை அபிவிருத்தி செய்வதற்காக 2017 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரை ரூபா 3,866 மில்லியன் பாதீட்டு மதிப்பீட்டு நிதி ஏற்பாடு வழங்கப்பட்டு ரூபா 606 மில்லியன் மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்தது. மேலும் ரூபா 487 மில்லியன் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட 400 மீற்றர் செயற்கையான ஓடு பாதையின் சில இடங்கள் சேதமடைந்து காணப்படல் நெடுவரிசைகளை பிரிக்கும் கோடுகள் அழிந்திருத்தல் என்பவற்றின் காரணமாக அந்த ஓடு பாதையில் போட்டி நிகழ்ச்சிகளுக்காக பங்குபறறுகின்ற விளையாட்டு வீரர்கள் சிக்கலுக்கு உள்ளாகியுள்ளதுடன் விளையாட்டுகளுக்கு பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்ட பழைய ஓடு பாதை அமைந்துள்ள பார்வையாளர் அரங்கின் கூரை களன்று இருந்தது. அவ்வாறே ரூபா 34 மில்லியன் செலவு செய்துள்ள பார்வையாளர் அரங்கின் நிர்மாண வேலைகளின் செயல்முன்னேற்றம் 90 சதவீதமாக இருந்த போதிலும் முழுமையாக வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர் அந்த உடன்படிககை இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் இதில் மின்பிறப்பாக்கி இயந்திரத்தினை பொருத்தும் செயற்திட்டத்திற்காக ரூபா 30 மில்லியன் செலவு செய்து நிர்மாண வேலைகளில் 65 சதவீதமான செயல்முன்னேற்றம் காணப்பட்டிருந்தும் செயற்திட்டத்தினை முடிவு செய்வற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.	2025-06-04 ஆந் திகதி அமைச்சு செயலாளரினால் இது சம்பந்தமாக பரீட்சித்து ஒரு அறிக்கையினை சமரப்பிப்பதற்கு ஒரு குழு நியமிககப்பட்டுள்ளது. அக்குழு அறிக்கையின் பிரகாரம் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.	நிர்மாண செயற்திட்டங்களை முகாமைத்துவம் செய்து ஒழுங்குபடுத்துவதன் மூலம் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேணடும்.

(இ)	மனித செயலாற்றல் ஆய்வுகூடத்தினை ஸ்தாபிப்தற்காக டெக்னோ மெடிக்ஸ் இன்டநெசனல் எனும் பெயருள்ள ஒரு தனியார் நிறுவனத்திற்கு 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 273.67 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் இச்செயற்திட்டத்திற்காக முறையான கிரய பிரிதிபலன் பகுப்பாய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆளணியை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையின் அடிப்படையில் 2025 ஏப்ரல் 22 ஆந் திகதி வரை ஆய்வுகூடத்தில் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக செயற்திட்டத்தின் எதிர்பார்த்த பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாத நிலைமை உருவாகி இருந்தது.	ஆளணியினரை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையின் அடிப்படையில் இன்றுவரை ஒப்பந்த உடன்படிக்கையினை திருத்தம் செய்வதற்கு முடியாதுள்ளது. உரிய அறிக்கையினை கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	கிரய பிரதிபலன் தொடர்பாக பகுப்பாய்வினை மேற்கொண்டு செயற்திட்டம் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும். செலவு செய்த பணத்திற்கு பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு துரிதமாக வழங்குனர்களுடன் கலந்துரையாடி செயற்திட்டத்தின் பிரதிபலன்கள் உட்பாய்ச்சப்படும் வகையில் செயற்பாட்டு நடவடிககைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

4.3 செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	**பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்**	**சிபாரிசுகள்**
விளையாட்டுத்துறை அமைச்சின் 34.5 ஹெக்டயர் பரப்பளவான நுவரெலியா காணியில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட உயர்வான வியைாட்டு கட்டிட தொகுதியினை நிர்மாணக்கும் செயற்திட்டத்திற்காக கடன்திட்ட கட்டணமாக யூரோ 264,492.34 அதாவது ரூபா 51,047,021 செலுத்தப்பட்டிருந்தும் 2021 ஆம் ஆண்டின் போது செயற்திட்டத்தை நிறுத்தியதன் காரணமாக அதற்காக செலவு செய்த முழுச் செலவும் விளைவற்றுக் காணப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக 2023 ஆம்	இன்றுவரை EIlipse Project SAS, France ஒப்பந்த நிறுவனம் இழப்பீட்டினை வேண்டுதல் சம்பந்தமாக தீர்த்துவைத்தல் நடைமுறைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள து. அதற்காக சட்டமா அதிபர் திணைக்கத்தின் ஆலோசனையின் அடிப்படையில் நடவடிக்கை	செயற்திட்டம் எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் திட்டமிடப்பட வேண்டியதுடன் அரசாங்கத்திற்கு ஒரு நட்டம் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுப்பதற்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

ஆண்டின் போது இந்த ஒப்பந்தகாரரினால் யூரோ 23,026,417.76 இழப்பீட்டு பணமும் செயற்திட்டத்தின் ஆலோசக நிறுவனமான மொறட்டுவை பல்கலைக் கழகத்தினால் செயற்திட்டத்தினை நிறுத்தியதன் காரணமாக ரூபா 378,067,000 இழப்பீட்டு பணமும் வேண்டிக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அமைச்சினால் அதற்காக சட்டமா அதிபரின் ஆலோசனை விசாரிக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரையும் சட்டரீதியாக நடவடிக்கை தீரத்துவைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இச்செயற்திட்டத்தினை இரத்துச் செய்ததன் காரணமாக ஒப்பந்த நிறுவனம் மற்றும் ஆலோசனை நிறுவனத்தினால் சமர்ப்பித்த உரிமை கோரல்களை ஆய்வு செய்வதற்காக விசே ஆலோசகருக்கு மீளாய்வாண்டில் ரூபா 3,648,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.	எடுக்கப்படுவதுடன் தற்பொழுது நடைமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.	

4.4 பணம் விடுவிக்கப்பட்டிருந்தும் செயல்முன்னேற்றத்தை பெற்றுக்கொள்ளாத செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
திஸ்ஸமகாராம பிரதேச சபையிடமிருந்து கணக்காய்விற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சினால் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி திஸ்ஸமகாராம பிரதேச சபைக்கு ‘‘ஜயகமு’’ என்ற தலைப்பின் கீழ் 02 திறந்த வெளி உடலை மேம்படுத்துதல் நிலையங்களை ஸ்தாபிப்பதற்காக ரூபா 2,000,000 பணம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 1,850,000 நிலையான செயற்பாடுகளுக்காக செலவு செய்யப்பட்டுள்ளது என அமைச்சினால் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தும் பிரதேச சபையின் கணக்குகளைப் பரீட்சித்த போது இப்பணம்	இச்செயற்திட்டம் தொடர்பாக எதிர்வரும் காலங்களில் பரீட்சித்து திறந்தவெளி உடலை மேம்படுத்தும் நிலையத்தை ஸ்தாபிப்பத்றகான தேவைப்பாடு இல்லையாயின் மீள ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்.	அமைச்சினால் வழங்கிய நிதி எற்பாடு தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

அச்செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படாது 05 ஆண்டுகளாக விளைவற்று வைப்புக் கணக்குகளில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

4.5 உள்நாட்டு நிதிகளின் மூலம் அமுல்ப்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
கிரிக்கட் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் பிரதேச மட்டத்தில் கிரிகட் விளையாட்டினை அதிகரிக்கச் செய்து திறமையுள்ள 3,000 கிரிகட் வியைாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை அடையாளம் காணும் குறிக்கோளுடன் ரூபா 1,500 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் இச்செயற்திட்டத்தினை 373 பாடசாலைகளில் அமுல்ப்படுத்துவதற்காக அதில் ரூபா 507.88 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததனால் ரூபா 992.12 மில்லியன் நிதி ஏற்பாடு குறைந்த பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தது. இந்நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துவது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.	இச்செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்தும் போது அரசாங்கத்தின் கடன் சுமையை குறைக்கும் வகையில் செலவு செய்கின்ற நிதி எற்பாட்டினை முழுமையாக பயன்படுத்தும் வகையில் தேவைப்பாட்டினை அடையாளம் காண்பதற்கு முன்னுரமை வழங்கப்பட்டுள்ளது.	நடைமுறையில் அமுல்ப்படுத்தக்கூடிய செயற்திட்டங்களை அடையாளங்கண்டு அதற்காக மாத்திரம் நிதி ஏற்பாடு வழங்கப்படுதல் வேண்டும்.
(i) கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட 07 மாவட்டங்களின் 99 பாடசாலைகளுக்கு ரூபா 151.94 மில்லியன் நிதி ஏற்பாடு விடுவிக்கப்பட்டிருநததுடன் அதில் 35 பாடசாலைகள் 2024 ஆம் ஆண்டின் இறுதி வரையும் ரூபா 45.42 மில்லியன் அல்லது 30 சதவீதத்தினை மாத்திரம் பயன்படுத்தியிருந்தது.	ஆண்டின் இறுதியில் காணப்பட்ட வானிலை நிலைமையின் கீழ் சில மாவட்டங்களில் நிர்ணயிக்கப்பட்டவாறு அமுல்ப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.	நிர்மாண செயற்திட்டங்களை முறையான கண்காணிப்புடன் மேற்கொள்வதற்கும் உரிய வேளையில் செயற்திட்டங்களின் செயல் முன்னேற்றங்களை பின்தொடர் நடவடிக்கை எடுப்பதற்கும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

(ii)	அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த இன்னும் மூன்று மாவட்டங்களின் 25 பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 28.70 மில்லியன் செலவு செயயப்பட்டிருந்தும் அப்பாடசாலைகளின் வேலைகள் பூர்த்திசெய்யப்படாது இடை நடுவில் நிறுத்தீவைக்கப்பட்டிருந்தது.	ஆண்டின் இறுதியில் காணப்பட்ட வானிலை நலைமையின் கீழ் சில மாவட்டங்களில் நிர்ணயிக்கப்பட்டவாறு அமுல்ப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.	நிர்மாண செயற்திட்டங்களை முறையான கண்காணிப்புடன் மேற்கொள்வதற்கும் உரிய வேளையில் செயற்திட்டங்களின் செயல் முன்னேற்றங்களை பின்தொடர் நடவடிக்கை எடுப்பதற்கும் கவனம் செலுத்துதல் வேண்டும்.
(iii)	இந்த கிரிகட் அபிவிருத்தி செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்தும் போது பாடசாலைகளில் காணப்படுகின்ற நிதி வசதிகள், உட்கட்டமைப்பு வசதிகள், உபகரணங்கள் மற்றும் தேவைப்பாடு தொடர்பாக முறையாக ஆய்வு செய்யாது பணம் விடுவிக்கப்பட்டதனால் 07 பாடசாலைகளால் ரூபா 10.55 மில்லியன் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட விகட் திடல்கள் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.	இப்பாடசாலை கிரிகட் விளையாட்டினை ஆரம்பிப்பதற்காக புதிதாக அடையாளங்காணப்பட்ட பாடசாலை ஆனதுடன் தேவைப்பாட்டினைப் பூரணப்படுத்தியதன் பின்னர் இந்த விகட் திடல்கள்களை பயன்படுத்தி கிரிகட் வியைாட்டினை ஆரம்பிக்கும் இயலுமை உள்ளது.	நிர்மாண செயற்திட்டங்களை முறையான கண்காணிப்புடன் மேற்கொள்வதற்கும் உரிய வேளையில் செயற்திட்டங்களின் செயல் முன்னேற்றங்களை பின்தொடர் நடவடிக்கை எடுப்பதற்கும் கவனம் செலுத்துதல் வேண்டும்.
(iv)	புத்தளம் மாவட்டத்திலுள்ள விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் விகட் திடல்களை தயார்படுத்தும் செலவுகள் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 5.68 மில்லியனாக காட்டப்பட்டிருந்தும் 03 பாடசாலைகளின் விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கை பூர்த்தி செயயப்பட்டிருக்காததுடன் அதற்காக ரூபா 3.32 மில்லியன் மொத்த பெறுமதியான 03 காசோலைகள் மத்திய பொறியியல் ஆலோசனை பணியகத்தின் பெயரில் எழுதி கணக்காளரின் பொறுப்பில்	அது சம்பந்தமாக எதிர்வரும் காலங்களில் மாவட்ட செயலகத்திடம் விசாரித்து தகவல்கள் சமர்ப்பிக்கப்படும்.	நிர்மாண செயற்திட்டங்களை முறையான கண்காணிப்புடன் மேற்கொள்வதற்கும் உரிய காலங்களில் செயற்திட்டங்களின் செயல்முன்னேற்றத்தினை பின்தொடர் நடவடிக்கை எடுப்பதற்கும் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

	வைக்கப்பட்டிருந்தது. எனினும் கணக்காய்வுத் திகதி வரை இக்காசோலைலைகளின் செல்லுபடியாகும் காலம் காலாவதியாகியிருந்தது. மேலும் ஒப்பந்தககாரரான சிவில் பொறியியல் நிறுவனத்திற்கு காசோலை எழுதப்படாது மத்திய பொறியியல் ஆலோசனை பணியகத்திற்கு காசோலைகள் எழுதுதல் கணக்காய்வில் சச்சரவுத் தன்மையான ஒரு விடயமாகும்.		
(v)	கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்ட விடயங்களுக்கு இணங்க விகட் திடலினை நிர்மாணிக்கும் ஒப்பந்தக்காரர்கள் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையினை பின்பற்றி இருந்தார்களா என்பது பற்றி பன்தொடர் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக ஒரு செயற்திட்டத்திற்காக தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரருக்கு மற்றுமொரு செயற்திட்டத்தினை வழங்குவதும் ஒப்பந்தக்காரரிடமிருந்து கேள்வி மனுவினை கோருவதற்கு போதியளவு காலம் வழங்கப்படாமையும் விலைமனுக்கோரல்கள் பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்களிடமிருந்து மேற்கொள்ளப்படாமையும் விளையாட்டு மைதானங்கள் அல்லது விக்கட் திடல்களை நிர்மாணித்தல் சம்பந்தமாக அனுபவம் இல்லாத ஒப்பந்தக்காரரிடமிருந்து விலை மனுக்கள் கோரியிருந்தமையும் ஒப்பந்த முரண்களுக்காக முறையான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கெண்டிருக்காமையும் ஆகிய முறையற்ற நடைமுறைகள் அவதானிக்கப்பட்டன.	ஆண்டின் இறுதியில் காணப்பட்ட கால நிலை நிலைமைகளின் கீழ் சில மாவட்டங்களில் நிர்ணயிக்கப்பட்டவாறு அமுல்ப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.	நிர்மாண செயற்திட்டங்களை முறையான கண்காணிப்புடன் மேற்கொள்வதற்கும் உரிய வேளையில் செயற்திட்டங்களின் செயல் முன்னேற்றங்களை பின்தொடர் நடவடிக்கை எடுப்பதற்கும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

4.6 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
மேற்கூறிய நிலையத்தில் வெளிச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக ABT மைதானத்தினை தயார்படுத்துவதற்காக ரூபா 4,859,000 செலவு செய்யப்பட்டிருந்தும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ABT மைதானம் மற்றும் உபகரணங்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டதுடன் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் அங்கீகரிக்கப்பட்டிருக்காத விசேட கட்டணத்திற்காக ரூபா 141,789 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.	ஏபீரீ மைதானத்தினை தயார்படுத்தும் நிர்மாண வேலையின் போது மிகையாகச் செலுத்தப்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்ட 05 விசேட கட்டணப் பட்டோலைகளுக்கான ரூபா 141,789.00 பணத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.	எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அனைத்து கொடுப்பனவுகளுக்குமாக அதிகாரம் பெற்ற ஒரு உத்தியோகத்தரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளபபடுதல் வேண்டும்.

4.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ) மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளரின் பெயரில் பதிவுசெய்யப்பட்ட 17 வாகனங்கள் அமைச்சிடம் பௌதீகரீதியாக காணப்படாததுடன் அந்த வாகனங்கள் தற்பொழுது எந்த நிறுவனங்களிடம் காணப்படுகின்றது என்பது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து மீண்டும் அமைச்சினால்	06 வாகனங்கள் தற்பொழுது பயன்படுத்தப்படுகின்ற நிறுவனங்கள் சம்பந்தமான தகவல்கள் கணக்கு தணிக்கையாளர் நாயகத்தின் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மிகுதி 11 வாகனங்கள் சம்பந்தமாக கணக்கு தணிக்கையாளர் நாயகத்தின் அலுவலகத்திடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு	அமைச்சின் வாகனங்கள் தொடர்பாக தரிதமாக ஆராய்ந்து பார்க்க வேண்டியதுடன் ஏனைய நிறுவனங்களிடமுள்ள வாகனங்களை அந்த நிறுவனங்களுக்கு ஒப்படைப்பதற்கு அல்லது அமைச்சினால் பெற்றுக்கொள்வதற்கேனும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	பொறுப்பேற்பதற்கு அல்லது அந்த நிறுவனங்களுக்கு ஒப்படைப்பதற்கேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	தேவையான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	
(ஆ)	தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார செயற்பாடுகள் அமைச்சினால் வழங்கப்பட்டு தற்பொழுது அமைச்சினால் பயன்படுத்தப்படுகின்ற 03 வாகனங்களையும் நீர்ப்பாசன அமைச்சின் 02 வாகனங்களையும் தாவரவியல் மற்றும் விலங்கியல் பூங்கா மேம்பாட்டு அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த PA 9349 ஆம் இலக்க வாகனத்தினையும் இதுவரை அமைச்சிற்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த வாகனங்களை பொறுப்பேற்றல்/ ஒப்படைத்தலுக்காக தேவையான நடவடிக்கை தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது..	உரிய நிறுவனங்களுக்கு ஒப்படைப்பதற்கு அல்லது பொறுப்பேற்பதற்கு துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	எம்பிலிபிடிய தலைமைத்துவ அபிவிருத்தி நிலைய காணியில் தனியார் ஆதனங்கள் மற்றும் தனியார் குடியிருப்பாளர்கள் இருப்பதனால் தலைமைத்துவ அபிவிருத்தி தேசிய நிலையத்திற்கு இக்காணியை தெளிவாக பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது.	1992 ஆம் ஆண்டிலிருந்து வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு வேண்டுதல்கள் விடுவிக்கப்பட்டிருந்தும் இன்றுவரை இணக்கப்பாடு கிடைக்காததன் அடிப்படையில் தலைமைத்துவ அபிவிருத்தி தேசிய நிலையத்திற்கு தெளிவாக காணியை ஒப்படைக்கும் நடவடிக்கை தாமதமடைந்துள்ளது.	அமைச்சின் ஆதனங்களை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	சனாதிபதி செயலகம் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களுக்கு தற்காலிகமாக விடுவிக்கப்பட்ட CAF 2536, KE 6296, JO 9594 ஆம் இலக்க 03 வாகனங்களை மீளப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது அந்த நிறுவனங்களுக்கு சட்டரீதியாக உரிமையை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த வாகனங்களை பொறுப்பேற்றல்/ ஒப்படைப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் தற்பொழுது இடம்பெற்று வருகின்றது.	உரிய நிறுவனங்களுக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(உ)	PB 9860 ஆம் இலக்க வாகத்தின் உரிமையை பொறுப்பேற்றதன் பின்னர் திருத்தம் செய்தல் பொருத்தமானது என பொறியியலாளரின் அறிக்கையின் மூலம் சிபாரிசு செய்யப்பட்டிருந்தும் அந்த வாகனத்தின் உரிமையை பொறுப்பேற்றல் மற்றும் திருத்தம் செய்தல் மேற்கொள்ளப்படாது 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் அமைச்சின் வளவில் விளைவற்று நிறுத்திவைக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.	பொறுப்பேற்பதற்கு தேவையான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	உரிய நிறுவனங்களிடமிருந்து பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஊ)	KH 0989 ஆம் இலக்க வாகனத்தின் இன்ஜின் இலக்கம் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் தரவு முறைமையில் காணப்பட்ட இன்ஜின் இலக்கத்தினை விட மாற்றமாக உள்ளதனால் பதிவுசெய்தல் சான்றிதழினை திருத்தம் செய்து வாகனத்தின் பராமரிப்பு நடவடிக்கைகள் செய்யப்பட வேண்டும் என சிபாரிசு செய்யப்பட்டிருந்தும் இதுவரை எந்த சிபாரிசும் அமுல்ப்படுத்தப்படாது அமைச்சின் வளவில் விளைவற்று நிறுத்திதவைக்கப்பட்டிருந்தது.	இந்த வாகனம் கைதவிர்ப்பு நடைமுறையின் கீழ் எச்சப் பொருளாக கைதவிர்ப்புச் செய்வதற்கு தேவையான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	05/2024 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.8 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	விளையாட்டுத்துறை மருத்துவ நிறுவனத்தின் 2016 நவம்பர் 29 ஆந் திகதிய பெறுகைக் குழு தீர்மானத்தின் பிரகாரம் ரூபா 6,894,735 தொகைக்கு நவீன	கணனி தரவு மென்பொருள் முறைமைக்கான பராமரிப்பு உடன்படிக்கையினை	செயற்திட்டத்தினை முறைப்படியாக முகாமைத்துவம் செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்

	தொழில் நுட்பத்தை பயன்படுத்தி திறமையை அடையாளங்காணும் நடைமுறைக்கு உதவியளித்தல், தேசிய மட்டத்திலுள்ள அனைத்து விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளின் தரவுக் களஞ்சியத்தினை பேணுதல், உடல் நல கோளாறுக்கான சிகிச்சைகளுக்காக அனுப்பிவைத்தல் மற்றும் தேவைப்படுகையில் உரிய ஏனைய அனைத்து மருத்துவ தகவல்கள் சம்பந்தமாக அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கு விளையாட்டு வீரர்களின் மருத்துவ அறிக்கைகளை வழங்குதல் ஆகிய குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக ஒரு மென்பொருள் தயாரிக்கப்பட்டிருந்தும் அதிலிருந்து எதிர்பார்த்த குறிக்கோள்கள் நிறுவனத்தினால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. மேலும் முறைமையை பூர்த்திசெய்து 06 மாதங்களின் பின்னர் விடுவிக்கப்பட வேண்டி காணப்பட்ட நிறுத்திவைத்தல் கட்டணமான ரூபா 1,378,947 பணம் குறித்த சில நாட்களில் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் இந்த மென்பொருளினை பராமரிப்பது தொடர்பாக உடன்படிக்கை செய்துகொள்ள தவறவிடப்பட்டிருந்தது.	மேற்கொள்வதற்காக ஒரு குழு 2025-02-03 ஆந் திகதி நியமிக்கப்பட்டதுடன் அதன் போது இதனை பயன்படுத்துகின்ற உத்தியோகத்திர்களிடமிருந்து அதனை பயன்படுத்தும் போது ஏற்படுகின்ற சிக்கல்களை மற்றும் பிரச்சினைகளை அடையாளங்கண்டு எழுத்துமூலம் நிறுவனத்திற்கு ஒப்படைத்ததன் பின்னர் மேலதிக நடவடிக்கைகள் எடுத்தல் பொருத்தமானதாகும். அதற்கிணங்க மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஆ)	இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் விளையாட்டுத்துறை அதிகாரசட்டத்தினை திருத்தம் செய்தல் சம்பந்தமாக 2023-05-16 ஆந் திகதி சனாதிபதி செயலகத்தினால் நான்கு நபர்களைக் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டிருந்தது. எனினும் கணக்காய்வுத் திகதி வரை நடைமுறையில் செயற்படுத்தும் பிரச்சினையுடனான சந்தர்ப்பத்தினை தீர்த்துவைக்கும்	சனாதிபதியின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட குழுவுக்கு மேலதிகமாக விளையாட்டுத் துறை மற்றும் சட்டம் சம்பந்தமான அறிஞர்களைக் கொண்ட ஒரு குழுவினால் விளையாட்டுத்துறை அதிகாரச் சட்டத்தினை திருத்தம் செய்வதற்குரிய வரைபு	விளையாட்டுத் துறை அதிகாரச் சட்டத்தினை துரிதமாக திருத்தம் செய்து நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும.

வகையில் திருத்தம் செய்வதற்கும் நாளதுவரையாக்குவதற்கும் அமைச்சு தவறியிருந்தது.	தயாரிக்கப்பட்டதுடன் அந்த வரைபு கௌரவ அமைச்சருக்கும் சனாதிபதியின் செயலாளருக்கும் மேலதிக ஆலோசனைகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	

5 மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சில் சிரேஷ்ட மட்டத்தில் 11 வெற்றிடங்களம் மூன்றாம் மட்டத்திலுள்ள 02 வெற்றிடங்களும் இரண்டாம் மட்டத்தில் 35 வெற்றிடங்களும் ஆரம்ப மட்டத்தில் 01 வெற்றிடமும் காணப்பட்டன. தலைமைத்துவ அபிவிருத்தி தேசிய நிலையத்தில் சிரேஷ்ட மற்றும் மூன்றாம் மட்டத்தில் 02 வீதமப் படியான வெற்றிடங்களும் ஆரம்ப மட்டத்தில் 09 வெற்றிடங்களம் காணப்பட்டன. வியைாட்டுத்துறை மருத்துவ நிறுவனத்தில் மற்றும் விளையாட்டுத்துறை கல்வி நிறுவனத்தில் சிரேஷ்ட மட்டத்தில் வெற்றிடங்கள் 06 வீதமும் மூன்றம் மட்டத்தில் வெற்றிடங்கள் முறையே 01 மற்றும் 08 வீதமும் இரண்டாம் மட்டத்தில் வெற்றிடங்கள் முறையே 04 மற்றும் 10 வீதமும் ஆரம்ப மட்டத்தில் வெற்றிடங்கள் முறையே 05 மற்றும் 03 வீதமும் அடையாளம் காணக்கூடியதாக இருந்தது.	இந்த வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்கு தேவையான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	தேவைப்பாட்டினை கருத்தில் கொண்டு அங்கீகரித்த ஆளணியை மீண்டும் திருத்தம் செய்வதற்கு அல்லது ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	தலைமைத்துவ அபிவிருத்தி நிலையம் 1985 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் நிலையத்திற்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆளணியினருக்கான புதிய பதவிகளை உள்ளடக்கி திருத்தம் செய்யப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. தற்பொழுது இந்த நிலையத்தில் பல பௌதீக நிர்மாண வேலைகளும் திருத்த வேலைகளும் காணப்டுவதுடன் தொழில்நுட்ப உத்தியோகத்தர் இல்லை எனவும் உடல் பொருத்தத்தில் பயிற்சியினை வழங்குவதற்காக மற்றும் புதிதாக தயாரிக்கப்பட்டுள்ள Out Bounding செயற்பாட்டில் நடவடிக்கை எடுப்பதற்காக பயிற்சி உத்தியோகத்தர்கள் ஆளணியில் இல்லை எனவும் அவதானிக்கப்பட்டது.	தகமைகள் உள்ள பயிற்றுவிப்பாளர்களை அங்கீகரித்த ஆளணிக்குள் உள்ளடக்கப்பட்டு எதிர்வரும் காலங்களில் சேர்த்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.	தேவைப்பாட்டிற்கு இணங்க புதிய பதவியை உருவாக்கி ஆட்சேர்ப்பு நடைமுறையை திருத்தம் செய்தல் வேண்டும்.